# பெல்கோம் வீதி

பிறந்த நகரத்தின்
அமைதி துயிலும் தெருக்கள்
அழைக்கின்றன என்னை அடிக்கடி.
எனது எல்லா தெருக்களும் நேராக ஓடுகின்றன
வெயிலில் ஜொலிக்கும் கடலை நோக்கி.
ஒரு ஜன்னலிலிருந்து பூப்போல தெருவில் குதித்து
இன்னொரு ஜன்னலுக்கு தாவும் பூனைகள்.
குட்டை மரங்களில் இருந்து சிதறிய மஞ்சள் பூக்களின்
மேல் நோகாமல் மிருதுவாக சைக்கிள் ஓட்டிச் செல்லும்
மனிதர்கள்.
புதையுண்ட அரிக்கமேடு தெருக்களில் ரோமானியர்கள்
நடமாடியது போல் வேடிக்கை பார்த்துக்கொண்டே நடக்கும்
வெளிநாட்டுப் பயணிகள்.
சத்தம் காட்டாமல் உடலுக்குள் பாய்ந்து கொண்டிருக்கும்
ரத்த ஓட்டம் போல் நகர்கிறது எனது தெரு.
ஆவி பறக்கும் தேநீர் கோப்பை முன் அமர்ந்திருப்பது
போல்
என்னை எனக்குள் பார்த்துக்கொண்டு
நான் அமர்ந்திருக்கிறேன்
அமைதி துயிலும் என் தெருவுக்கு முன்னால்.
---4 செப்டம்பர் 2009